


புதுகை
# வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM   VARALARUU   PUDUGAIVARALARU   VARALARUU   7502051351






### மழையை சமாளிக்க முடியாமல் தடுமாறும் திமுக அரசு

# விமர்சனம்

## ஆட்சியில் இருப்போர் மக்களின் துன்பத்தைப் போக்குவார்கள் என்ற நம்பிக்கை அற்றுப் போய்விட்டது. தொடர் கனமழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, அதிமுக நிர்வாகிகள் உடனடியாக உதவ வேண்டும் :ஈபிஎஸ்



**சென்னை , ஆக-2**

திமுக அரசு தற்போது தமிழகத்தில் பெய்து வரும் மழை சமாளிக்க முடியாமல் தடுமாறுவதாக அதிமுக இடைக்கால பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி விமர்சித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "தமிழகத்தின் பல மாவட்டங்களில் அடுத்த மூன்று நாட்களுக்கு கனமழை பெய்யும் என்று கடந்த வியாழன் (28.7.2022) அன்றே, சென்னை வானிலை ஆராய்ச்சி மையம் அறிவித்திருந்தது. அதே போல், வேலூர், திருப்பத்தூர், கிருஷ்ணகிரி மாவட்டங்கள் மற்றும் தென்மாவட்டங்களில் மழை பெய்திருக்கிறது.

நான் பலமுறை சுட்டிக்காட்டிய பிறகும், இந்த விடியா அரசின் உணவுத் துறை, விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்த நெல்மூட்டைகளை சரியானபடி பாதுகாப்பாக குடோன்களில் வைக்காததாலும், தார்பாய்கள் கொண்டு மூடாததாலும், தற்போது பெய்த இரண்டு மூன்று நாட்கள் மழையிலேயே, சுமார் ஐந்தாயிரம் நெல் மூட்டைகளுக்கு மேல் பாதிக்கப்பட்டு, முளைவிட்டு இருந்தது பெரும்பாலான ஊடகங்களிலும், நாளிதழ்களிலும், சமூக வலைதளங்களிலும் செய்திகளாக வெளிவந்துள்ளன.

ஏற்கெனவே, இந்திய உணவுக் கழகம், தமிழ்நாடு சிவில் சப்ளைஸ் நிறுவனம் மூலம் கொள்முதல் செய்யப்பட்ட நெல்மூட்டைகள் மழையில் நனைந்து, அவை அரவை ஆலைகளில் அரிசிகளாக மாற்றப்படும்போது, கரும் பழுப்புநிறமாகமிகவும்தரம் குறைந்து கால்நடைகள் கூட உண்ணுவதற்கு லாயக்கற்றதாக உள்ளது என்று சான்று அளித்துள்ளனர்.

நான், இந்த விடியா திமுக ஆட்சியில் நடைபெறும் தவறுகளை சுட்டிக்காட்டும் போதெல்லாம், இந்தவிடியா அரசின் அமைச்சர்கள் எனது புகார்களுக்கு சப்பைக்கட்டு கட்டி பதில் கொடுக்கும் வேலையில் ஈடுபடுவதை விட்டுவிட்டு, பாதிக்கப்பட்ட இடங்களை நேரில் ஆய்வு செய்வது, தேவைப்படும் இடங்களில் நெல் மூட்டைகளை இருப்பு வைப்பதற்கு குடோன் வசதிகளை ஏற்படுத்துவது மற்றும் நெல்மூட்டைகளை மூடுவதற்குத் தேவையான தார்பாய்களை வாங்குவது போன்ற வேலைகளில் ஈடுபட்டிருந்தால், கடந்த சில நாட்களில் பெய்த மழையில் மீண்டும் கொள்முதல்செய்யப்பட்ட நெல் மூட்டைகள் முளைத்து சேதமடைந்திருக்காது.

மதுரை மாவட்டம் முழுவதிலும் 30.7.2022 அன்று, தொடர்ச்சியாக 3 மணி நேரத்திற்கும் மேலாக இடியுடன் கூடிய கனமழை பெய்துள்ளது. இதனால் ஆங்காங்கே மழை நீரானது வெள்ளம் போல் பெருக்கெடுத்து ஓடியது. குறிப்பாக, உலகப் பிரசித்தி பெற்ற மதுரை மீனாட்சி அம்மன் கோவில் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. பார்வதி என்ற கோயில் யானையையும் மழை நீர் சூழ்ந்துள்ளது. நீரில்மூழ்கிய நிலையில் யானையை அழைத்துச்சென்ற காட்சிகளும் ஊடகங்களில் காட்டப்பட்டன.

மதுரையில் கனமழை காரணமாக, ஆண்டாள்புரம், ஜெய்ஹிந்புரம், மேலபெருமாள் மேஸ்திரி வீதி ஆகிய இடங்களில் 4 பேர் பலியாகி உள்ளனர். கனமழை பெய்யும் என்று வானிலை ஆராய்ச்சி நிலையம் முன்கூட்டியே எச்சரித்திருந்தும், இந்த விடியா அரசும், வருவாய்த் துறையும், மாவட்ட நிர்வாகமும் எந்தவித முன்னெச்சரிக்கை நடவடிக்கையையும் எடுக்காததால், இதுபோன்ற அவலங்கள் நிகழ்ந்துள்ளன.

ஆட்சியில் இருப்போர் மக்களின் துன்பத்தைப் போக்குவார்கள் என்ற நம்பிக்கை அற்றுப் போய்விட்டது. தொடர் கனமழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அடலேறுகள் மற்றும் நிர்வாகிகள் அனைவரும் உடனடியாக உதவ வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

விடியா திமுக அரசின் முதல்வர் மு.க.ஸ்டாலின் ''போட்டோ ஷூட்'' நடத்தி, தன்னை முன்னிலைப்படுத்தி விளம்பரம் செய்வதில் காட்டும் அக்கறையை, பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு உடனடியாக அமைச்சர்களையும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும் அனுப்பி வைத்து, மக்களுக்குத் தேவையான உதவிகளை வழங்குவதில் முனைப்பு காட்ட வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்" என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

### திமுக ஆட்சியிலும் கொள்ளை

**அதிமுக ஆட்சியைப் போல் அரசு மதுபான கடைகளில் எம்ஆர்பியை விட கூடுதலாக 10 ரூபாய் வசூலிக்கப்படுகிறது**

**புதுக்கோட்டை மாவட்டத்தில் நாள் ஒன்றுக்கு 15 லட்ச ரூபாய் வீதம் மாதம் நான்கரை கோடி ரூபாய் கொள்ளை அடிக்கப்படுகிறது: வரலாறு நாளிதழ்**

# புதுக்கோட்டை மாவட்டத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்



**புதுக்கோட்டை, ஆக-2**

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் கவிதா ராமு தலைமையில் நேற்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் முதியோர் உதவித்தொகை, வேலைவாய்ப்பு, கல்வி உதவித்தொகை, பட்டாமாறுதல் போன்ற பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 326 மனுக்களை பொதுமக்கள் மாவட்ட ஆட்சியரிடம் அளித்தனர். இம்மனுக்களை பெற்றுக்கொண்ட மாவட்ட ஆட்சியர் இம்மனுக்களின் மீது தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்கள்.

மேலும் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்தின் சார்பில், ரூ.4,500 மதிப்புடைய காதுக்கு பின்புறம் அணியும் காதொலிக் கருவி, ரூ.6,500 மதிப்புடையமடக்குசக்கர நாற்காலி மற்றும் ரூ.3,000 மதிப்புடைய முழங்கை தாங்கி என ஆகமொத்தம் ரூ.14,000 மதிப்புடைய நலத்திட்ட உதவிகளை 3 மாற்றுத்திறனாளிகளுக்கு, மாவட்ட ஆட்சியர் கவிதா ராமு வழங்கினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் மா.செல்வி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் ஜி.கருப்பசாமி, தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) (பொ) கணேசன், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் உலகநாதன், உதவி ஆணையர் (கலால்) எம்.மாரி மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



▶ மாமல்லபுரத்தில் நடைபெற்று வரும் 44வது சர்வதேச சதுரங்க போட்டி நான்காம் நாள் ஆட்டத்தில் போட்டியாளர்கள் தங்கள் இலக்கை குறிவைத்து விளையாடிய போது எடுத்த படம்



▶ தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நேற்று தலைமை செயலகத்தில், சட்டமன்ற ஆவணங்கள் கணினி மயமாக்கம் மற்றும் மேலாண்மை திட்டம் குறித்த ஆய்வு கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை முதன்மை செயலாளர் (பொறுப்பு) குமார் ஜயந்த், மின்னலுமே இயக்குனர் பிரவீன் நாயர், சட்டப்பேரவை செயலாளர் சீனிவாசன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### இல்லம் தேடி கல்வி திட்ட தன்னார்வலர்களுக்கு

# பரிசு வழங்கி பாராட்டிய மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்




**புதுக்கோட்டை, ஆக.2-**

புதுக்கோட்டை மாவட்ட நிர்வாகம் மற்றும் தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் சார்பில் புதுக்கோட்டை நகர்மன்றத்தில் ஐந்தாவது புத்தகத்திருவிழா நடைபெற்று வருகிறது. இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் கவிதா ராமு வழிகாட்டல் படியும் மற்றும் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் சே.மணிவண்ணன் ஆலோசனைப்படியும் இல்லம் தேடி கல்வி திட்ட அரங்கு அமைக்கப்பட்டுள்ளது.

இதில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு ஒன்றியத்திலும் உள்ள தன்னார்வலர்கள் தங்களுடைடைய கற்றல் உபகரணங்களை காட்சிப்படுத்தி அதனை மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் விளக்கி வருகின்றனர். அதே போல் புத்தகத் திருவிழாவிற்கு வருகை தரும் மாணவர்களிடம் தன்னார்வலர்கள் பொது அறிவுக் கேள்விகள் மற்றும் விடுகதைகள் கேட்டு சரியாக பதில் கூறும் மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கிப் பாராட்டி வருகிறார்கள்.

மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் சே.மணிவண்ணன் ஒவ்வொரு நாளும் அரங்கிற்கு வருகை தரும் தன்னார்வலர்களுக்கு ஆயிரம் மதிப்பிலான பரிசுப்புத்தகங்கள் வழங்கிப்பாராட்டியும் வருகிறார். அந்தவகையில் நேற்று இல்லம் தேடி கல்வி திட்ட அரங்கிற்கு திடீரென வருகை தந்த மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் சே.மணிவண்ணன் கந்தர்வக்கோட்டை தன்னார்வலர்கள் மற்றும் புத்தகத் திருவிழாவிற்கு வருகை தந்த மாணவர்களை பாராட்டினார்.

நிகழ்வின் போது மாவட்ட உதவி திட்ட அலுவலர் தங்கமணி, மாவட்ட உதவி திட்ட ஒருங்கிணைப்பாளர் சுதந்திரன், புதுக்கோட்டை பள்ளித்துணை ஆய்வாளர் குருமாரிமுத்து, அன்னவாசல் வட்டாரக் கல்வி அலுவலர் கு.கலா, ஆவுடையார் வட்டாரக் கல்வி அலுவலர் மலர்விழி புவனேஸ்வரி, இல்லம் தேடிக் கல்வி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் முனியசாமி, ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் வீரப்பன், கந்தர்வக்கோட்டை வட்டார வளமைய மேற்பார்வையாளர் பிரகாஷ், இல்லம் தேடிக் கல்வித் திட்ட ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள் சுரேஷ், ரகமதுல்லா, புதுக்கோட்டை இல்லம் தேடி கல்விதிட்ட ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் வீரமணி மற்றும் தன்னார்வலர்கள் பிரியா, சுகன்யா, உமா, கயல் விழி, கீதா ஆகியோர்கள் உடனிருந்தனர்.

# சென்னையின் இரண்டாவது விமான நிலையம் பரந்தூரில் அமைக்கப்படும்

### மத்திய அமைச்சர் தகவல்



சென்னை , ஆக-2

சென்னையில் இரண்டாவது விமான நிலையம் பரந்தூரில் அமையவுள்ளதாக மத்திய விமானப் போக்குவத்துறை இணை அமைச்சர் விகே சிங் மக்களவையில் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற மழைக்காலக் கூட்டத்தொடர் தற்போது நடைபெற்று வரும் நிலையில் திமுக மக்களவை உறுப்பினர் கனிமொழி இரண்டாவது விமான நிலையம் அமைப்பது தொடர்பாக அமைச்சரிடம் கேள்வி எழுப்பினார். எம்பி கனிமொழியின் கேள்விக்கு பரந்தூரில் தான் 2ஆவது விமான நிலையம் அமையவுள்ளது என அமைச்சர் பதில் அளித்தார்.

சென்னைக்கு இரண்டாவது விமான நிலையம் அமைப்பதன் மூலம் மாநிலத்தின் தொழில் மற்றும் வணிக வளர்ச்சிக்கு இது மிகவும் அவசியமாக கருதப்படுகிறது. எனவே புதியவிமான நிலையத்தை அமைக்க வேண்டிய தேவையின் தீவிரத்தைக் கருத்தில் கொண்டு மத்திய - மாநில அரசுகள் அதற்கான பணிகளை முடுக்கிவிட்டுள்ளன. தொடர்ந்து, சென்னையின் இரண்டாவது விமான நிலையம் அமைப்பதற்கான 4 இடங்களை தமிழ்நாடு அரசு தேர்வு செய்து இருந்தது. இந்த நான்கு இடங்களில் திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள பரந்தூர் மற்றும் திருவள்ளூர் மாவட்டம் பன்னூர் ஆகிய இரண்டு இடங்களை மத்திய அரசு இறுதி செய்துள்ளது. அதில் ஒன்றை தமிழ்நாடு அரசு இறுதி செய்ய பரிசீலித்து வருகிறது. பன்னூரில், 4 ஆயிரத்து 500 ஏக்கர் நிலம் கண்டறியப்பட்டது. அதே போல, பரந்தூரில், 4 ஆயிரத்து 791 ஏக்கர் நிலம் கண்டறியப்பட்டது. இரண்டு இடங்களிலும் இரு ஓடுபாதைகளுக்கு போதுமான இடமும் வான்வெளியும் உள்ளது.

இடத்தேர்வை இறுதி செய்ய மத்திய விமான போக்குவரத்து துறை அமைச்சர் ஜோதிராதித்ய சிந்தியாவை தமிழக தொழில்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு நேரில் சந்தித்து பேசினார். இந்த சூழலில் தான் இரண்டாவது விமான நிலையம் பரந்தூரில் அமையவுள்ளது அமைச்சரின் பதில் மூலம் தெரியவந்துள்ளது.

பரந்தூர் ஊராட்சியானது காஞ்சீபுரம் மாவட்டத்தில் உள்ள வாலாஜாபாத் அருகே உள்ளது. இந்த இடம் சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் இருந்து சுமார் 60 கிமீ தொலைவிலும், சென்ட்ரல் ரயில் நிலையத்தில் இருந்து 70 கிமீ தொலைவிலும் உள்ளது.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்






தங்கமான தெரு - நெல்லுமண்டி தெரு
ஸ்ரீ புவனேஸ்வரி ஜுவல்லர்ஸ்
3179, நெல்லுமண்டி தெரு, புதுக்கோட்டை - 622 001. போன் : 04322 222504, 222 505

| தங்கம் | கிராம் | 22 கேரட் தங்கம் | 24 கேரட் தங்கம் |
|---|---|---|---|
| விலை | 1 கிராம் | Rs.4,636 | Rs.5,038 |

## வரலாற்றில் இன்று



1931 எத்தியோப்பியாவின் முதலாவது அரசியலமைப்பை அதன் மன்னர் முதலாம் ஹைலி செலாசி வெளியிட்டார்.

1942 பெரும் இன அழிப்பு: பிரெஞ்சு அரசு பாரிசில் உள்ள அனைத்து 13,152 யூதர்களையும் கைது செய்து அவுசுவிட்சு வதை முகாமுக்கு அனுப்பக் காவற்துறையினருக்கு உத்தரவிட்டது.

1945 மன்காட்டன் திட்டம்: ஐக்கிய அமெரிக்கா புளூட்டோனியம்-கொண்ட அணுக்கரு ஆயுதங்களை நியூ மெக்சிகோ, அலமொகோர்தோ என்ற இடத்தில் வெற்றிகரமாக சோதித்தது.

1948 1948 அரபு - இசுரேல் போர்: இயேசு கிறிஸ்து வாழ்ந்த நாசரேத்து நகரத்தை இசுரேல் ஆக்கிரமித்தது.

1950 உலகக்கிண்ண உதைப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் உருகுவே பிரேசிலை 2-1 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.

1950 கொரியப் போர்: அமெரிக்கப் போர்க் கைதிகள் 31 பேர் வட கொரிய இராணுவத்தினரால் கொல்லப்பட்டனர்.

1951 பெல்ஜியம் மன்னர் மூன்றாம் லியோபோல்ட் முடிதுறந்ததை அடுத்து, அவரது மகன் முதலாம் பாடோயின் புதிய மன்னராகப் பதவியேற்றார்.

1965 பிரான்சையும் இத்தாலியையும் இணைக்கும் மோண்ட் பிளாங்க் சுரங்கப் பாதை திறக்கப்பட்டது.

1969 அப்பல்லோ திட்டம்: அப்பல்லோ 11, நிலாவில் தரையிறங்க முதலாவது மனிதரை ஏற்றிக் கொண்டு கென்னடி விண்வெளி மையத்தில் இருந்து புறப்பட்டது.

1979 ஈராக்கிய அரசுத்தலைவர் அசன் அல்-பாக்கிர் பதவி துறந்ததை அடுத்து சதாம் உசேன் தலைவரானார்.

1983 சில்லி தீவுகளில் பிரித்தானியாவின் உலங்கு வானூர்தி வீழ்ந்து விபத்துக்குள்ளாகியதில் 20 பேர் உயிரிழந்தனர்.

1989 புளொட் அமைப்பின் தலைவர் உமாமகேஸ்வரன் கொழும்பில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

1990 பிலிப்பீன்சில் 7.7 அளவு நிலநடுக்கம் ஏற்பட்டதில் 1,621 பேர் உயிரிழந்தனர்.

1990 உக்ரைன் சோவியத் குடியரசின் நிலத்துக்கு அக்குடியரசின் நாடாளுமன்றம் உரிமை கோரியது.

1995 காங்கேசன்துறையில் விடுதலைப் புலிகளால் இலங்கை கடற்படையின் எடித்தாரா கப்பல் மூழ்கடிக்கப்பட்டது.

### டீம் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை,

## புதுக்கோட்டை மிட்டவுன் மற்றும் மகாராணி ரோட்டரி சங்கங்கள் இணைந்து நடத்திய

## உலகத்தாய்பால் விழிப்புணர்வு விழா



புதுக்கோட்டை, ஆக.2-

நமது மத்திய மற்றும் மாநில அரசுகள், உலக சுகாதார மையம் மற்றும் யுனிசெப் போன்ற உலக நிறுவனங்கள் தாய்ப்பால் முக்கியத்துவம் பற்றியும் மக்களின் அறியாமையைப் போக்கி சமுதாயத்தில் விழிப்புணர்வை உண்டாக்கும் பொருட்டு வருடந்தோறும் ஆகஸ்ட் முதல் வாரத்தை உலக தாய்ப்பால் வாரமாக அனுசரிக்கப்படுகின்றன. இதனை முன்னிட்டு நேற்று புதுக்கோட்டை டீம் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை, புதுக்கோட்டைமிட்டவுன் ரோட்டரி சங்கம் மற்றும் மகாராணி ரோட்டரி சங்கம் இணைந்து உலகத்தாய்பால் விழிப்புணர்வு விழா மருத்துவமனை வளாகத்தில் நடைபெற்றது.

டீம் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையின் நிர்வாக இயக்குநர் மற்றும் சர்க்கரை நோய் நிபுணர் டாக்டர். சலீம் விழாவில் கலந்து கொண்டு அனைவரையும் வரவேற்றார். புதுக்கோட்டை ரோட்டரி மாவட்டம் 3000-த்தின் மண்டல ஒருங்கிணைப்பாளர்கள் வெங்கடாஜலம், சிவாஜி மற்றும் துணை ஆளுநர் சினேகா ஆகியோர் விழாவிற்கு முன்னிலை வகித்தனர்.

புதுக்கோட்டை மிட்டவுன் ரோட்டரி சங்கத்தின் தலைவர் சரவணன் மற்றும் மகாராணி ரோட்டரி சங்கத்தின் தலைவர் லெட்சுமி அண்ணாமலை தலைமை ஏற்று விழாவைத் தொடங்கி வைத்தனர். மிட்டவுன் ரோட்டரி சங்கத்தின் பொருளாளர் ரமேஷ் திட்ட விளக்கவுரையாற்றினார். டீம் மருத்துவனையின் மகப்பேறு மற்றும் மகளிர் நல சிறப்பு மருத்துவர் அனிதா தனசேகரன் மற்றும் குழந்தைகள் நல சிறப்பு மருத்துவர் மகேஷ்வரி இருவரும் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, தாய்ப்பால் பற்றிய விழிப்புணர்வு மற்றும் தாய்ப்பால் புகட்டுவதால் ஏற்படும் நன்மைகள் பற்றியும் தாய்ப்பால் குடிப்பதால் குழந்தைகளுக்கு ஏற்படும் நோய் எதிர்ப்பு சக்தி பற்றியும் தாய்மார்களிடம் விரிவாக எடுத்துரைத்தனர்.

விழாவில் பங்கேற்ற தாய்மார்களுக்கு வினா-விடை போட்டி நடைபெற்றது. வெற்றி பெற்றவர்களுக்கு சிறப்பு பரிசுகள் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் மகாராணி ரோட்டரி சங்கத்தின் செயலாளர் கலா கிருஷ்ணன் நன்றி கூறினார். விழா ஏற்பாடுகளை பொது மேலாளர் தி ஜோசப் மற்றும் செவிலியர் கண்காணிப்பாளர் யோகேஸ்வரி செய்திருந்தனர். இதில் ஏராளமான தாய்மார்கள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் மருத்துவமனை பணியாளர்கள் கலந்துகொண்டனர்

## திட்டச்சேரியில் தமிழ்நாடு மாநில அளவிலான 26-வது கைப்பந்து போட்டி பரிசளிப்பு விழா



நாகப்பட்டினம், ஆக.2-

நாகை மாவட்டம் திட்டச்சேரி அரசினர் மேல்நிலைப் பள்ளி மைதானத்தில் நாகை மாவட்ட கைப்பந்து கழகம் மற்றும் மன்சூர் கைப்பந்து கழகம் இணைந்து நடத்தும் 26-வது தமிழ்நாடு மாநில அளவிலான கைப்பந்து போட்டி நடைபெற்றது. இப்போட்டியில் செங்கல்பட்டு,பொள்ளாச்சி,ஈரோடு, சென்னை,திருச்சி,மயிலாடுதுறை உள்ளிட்ட 6 கல்லூரி அணிகள் பங்கேற்று விளையாடியது.

இந்த போட்டி கடந்த மாதம் 29-ம் தேதி வெள்ளிக்கிழமை தொடங்கி நேற்று முதல் நாள் இரவு முடிவடைந்தது. பல சுற்றுக்களாக நடைபெற்ற இப்போட்டியில் செங்கல்பட்டு அணியினர் முதல் இடத்தையும்,சென்னை அணியினர் 2-வது இடத்தையும், திருச்சி அணியினர் 3-வது இடத்தையும், பொள்ளாச்சி அணியினர் 4-வது இடத்தையும் பிடித்தனர். கைப்பந்து போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழா நேற்று நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு திட்டச்சேரி அரசினர் மேல்நிலைப் பள்ளியின் உடற்கல்வி ஆசிரியரும்,நாகை மாவட்ட கைப்பந்து கழக செயலாளருமான கண்ணன் தலைமை தாங்கினார். தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் தலைவர் கௌதமன்,முகமது ஷாநவாஸ் எம்எல்ஏ,தமிமுன் அன்சாரி முன்னாள் எம்எல்ஏ ஆகியோர் முன்னிலை வகித்தனர். நாகை மாவட்ட கலெக்டர் அருண் தம்புராஜ் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு சுழற்கோப்பை மற்றும் சான்றிதழ்களை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் நாகை நகர்மன்ற தலைவர் மாரிமுத்து,சர்வதேச கைப்பந்து வீரர் ராஜசேகர்,திருவாரூர் மாவட்ட வாலிபால் சங்கத் துணைத் தலைவர் குணசீலன், திட்டச்சேரி திமுக நகர செயலாளர் முகமது சுல்தான்,அதிமுக நகர செயலாளர் அப்துல் பாசித் மற்றும் கைபந்து பயிற்சியாளர்கள்,விழா ஏற்பாட்டுளர்கள், விளையாட்டு வீரர்கள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.முடிவில் கைபந்து பயிற்சியாளர் முகமது தௌபிக் நன்றி கூறினார்.

இதில் வெற்றி பெற்ற செங்கல்பட்டு அணியினருக்கு முதல் பரிசாக ரூ.50 ஆயிரம் மற்றும் சுழற் கோப்பையும்,இரண்டாம் பரிசாக சென்னை அணியினருக்கு ரூ.40 ஆயிரம் மற்றும் சுழற்கோப்பையும், மூன்றாம் பரிசு பெற்ற திருச்சி அணியினருக்கு ரூ.30 ஆயிரம் பக்கம் மற்றும் சுழற் கோப்பையும்,நான்காம் இடம் பெற்ற பொள்ளாச்சி அணியினர் ரூ.20 ஆயிரம மற்றும் சுழற் கோப்பையும்,மற்ற இரண்டு இடங்களை பிடித்த மயிலாடுதுறை,ஈரோடு அணியினருக்கு தல ரூ.10 ஆயிரம் மற்றும் சுழற் கோப்பை வழங்கப்பட்டது.

கார்த்திக் மெஸ்
உயர்தர அசைவ உணவகம்
Rtn. S.மூர்த்தி & பிரதர்ஸ்
சிவகாமி அம்மன் இரத்ததான கழகம்
புதுக்கோட்டை மாவட்ட இயற்கை விவசாயிகள் சங்கம்
புதிய பேருந்துநிலையம் எதிரில், புதுக்கோட்டை
செல் : 94426 42437

### செம்பனார்கோயில் அருகே

## நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்கில் மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் ஆய்வு



செம்பனார்கோயில், ஆக.2:

மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி தாலுகா செம்பனார்கோயில் அருகே உள்ள கிடாரங்கொண்டான் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்கில் மயிலாடுதுறை மாவட்ட வழங்கல் மற்றும்நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் பாலாஜி நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

கிடங்கிலிருந்து தரங்கம்பாடி வட்டத்தில் உள்ள 90 ரேஷன் கடைகளுக்கு அனுப்பி வைக்கப்படும் அத்தியாவசிய பொருட்களின் தரம், பொருட்களின் இருப்பு, நகர்வு பணி ஆகியன குறித்து ஆய்வு செய்தார். மேலும், மாவட்ட வழங்கல் அலுவலர் கூறுகையில்,மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள அனைத்து ரேஷன் கடைகளிலும் தரமான ரேஷன் பொருட்கள் விநியோகிக்கப்பட்டு வருகிறது. தொடர்ந்து தரமான ரேஷன் பொருட்கள் வழங்கவட்ட வழங்கல் அலுவலர்கள் மூலம்கண்காணிக்கப்பட்டு வருகிறது.

ரேஷன் அட்டைதாரர்கள் ரேஷன் பொருட்கள் குறித்து ஏதேனும் புகார் இருந்தால் வட்ட வழங்கல் அலுவலர்களிடம் மனுவாக அளிக்கலாம். அதனை ஏற்று புகார் தொடர்பாக ஆய்வுசெய்தபின்னர் உரிய நடவடிக்கைஎடுக்கப்படும் என்று கூறினார்.

இந்த மாதத்திற்கான ரேஷன் கடைகளுக்கு அனுப்பி வைக்கப்படும் ரேஷன் பொருட்களின் நகர்வுபணியைஎதிர்வரும் 18-ஆம் தேதிக்குள் முடிக்க தரக்கட்டுப்பாட்டு அலுவலர் ராகவனிடம் அறிவுறுத்தினார். ஆய்வின் போது தரங்கம்பாடி வட்ட வழங்கல் அலுவலர் பாபு, கிடங்கு உதவியாளர் மணிகண்டன், நகர்வு எழுத்தர்கள் பிரதீப்குமார், வடிவேல் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

### தஞ்சாவூர் தலைமை அஞ்சல் அலுவலகத்தில்

## சிறந்த தபால்காரர் விருது வழங்கும் விழா சிறப்பாக நடைபெற்றது



தஞ்சாவூர், ஆக.2-

தஞ்சாவூர் தலைமை அஞ்சலகத்தில் ஒவ்வொரு மாதமும் சிறப்பாக செயல்படும் தபால்காரர்களுக்கு சிறந்த தபால்காரர் விருது வழங்கப்பட்டு வருகிறது. அந்தவகையில் தலைமை அஞ்சலகத்தை சார்ந்த பஞ்சநாதன் என்பவருக்கு ஜூலை மாதத்திற்கான சிறந்த தபால்காரர் விருது வழங்கப்பட்டது தஞ்சை தலைமை அஞ்சலக முதுநிலை தலைவர் அருள்தாஸ் நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கி தபால்காரர் பஞ்சநாதனுக்கு பொன்னாடை அணிவித்து விருதினை வழங்கி பாராட்டி சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியில் அஞ்சலக துணைத் தலைவர் குழந்தைராஜ், அஞ்சலக ஊழியர்கள் சித்ராதேவி,சௌதா வெங்கடேஷ், அமிர்தவல்லி, மாதவன் மற்றும் ஊழியர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### நீர்நிலை ஆக்கிரமிப்புகளை அகற்றும் உத்தரவை

## 10 நாட்களில் அமல்படுத்த சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவு



சென்னை , ஆக.2-

நீர்நிலை ஆக்கிரமிப்புகளை அகற்றும் நீதிமன்ற உத்தரவை 10 நாட்களில் அமல்படுத்தாவிட்டால் தலைமைச் செயலாளரை நேரில் ஆஜராக உத்தரவிட நேரிடும் என சென்னை உயர் நீதிமன்றம் நேற்று கடுமையாக எச்சரித்துள்ளது.

சென்னை வேளச்சேரி, தரமணி, உள்ளிட்ட இடங்களில் உள்ள மழைநீர் வடிகால்களை ஆக்கிரமித்து கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளதாக செய்தி வெளியானது. இந்தச் செய்திகளின் அடிப்படையில் தாமாக முன் வந்து வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட தலைமைநீதிபதி முனீஷ்வர்நாத் பண்டாரி தலைமையிலான அமர்வு, சம்பந்தப்பட்ட பகுதிகளை நேரில் ஆய்வு செய்து ஆக்கிரமிப்புகள் கண்டுபிடிக்கப்பட்டால், அவற்றை சட்டப்படி அகற்ற வேண்டும் என கடந்த ஜனவரி மாதமே உத்தரவிட்டது. இந்த உத்தரவை அமல்படுத்தியது குறித்து கடந்த மார்ச் 31-ம் தேதிக்குள் அறிக்கை தாக்கல் செய்ய சம்பந்தப்பட்ட அரசு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருந்தது.

இந்த வழக்கு தலைமை நீதிபதி முனீஷ்வர்நாத் பண்டாரி மற்றும் நீதிபதி மாலா அமர்வில் மீண்டும் நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது இதுகுறித்து அறிக்கை தாக்கல் செய்ய அரசுத் தரப்பில் அவகாசம் கோரப்பட்டது. இதையடுத்து வழக்கு விசாரணையை இரு வாரங்களுக்கு தள்ளிவைத்த நீதிபதிகள், "நீதிமன்ற உத்தரவை அமல்படுத்தியது குறித்து அறிக்கை தாக்கல் செய்யாத அதிகாரிகளுக்கு 25 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்து உத்தரவிட்டனர்.

இதேபோல நீர்நிலை ஆக்கிரமிப்புகளை அகற்றக் கோரிய வழக்குகளில் நீதிமன்ற உத்தரவை அமல்படுத்தாத, மாவட்ட ஆட்சியர்கள் உள்ளிட்ட அதிகாரிகளுக்கு 25 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்து உத்தரவிட்டனர். மேலும், நீதிமன்ற உத்தரவுகளை அமல்படுத்த வேண்டும் என தலைமைச் செயலாளர் சுற்றறிக்கை வெளியிட்ட போதும், நீதிமன்ற உத்தரவை அமல்படுத்துவதில்லை என நீதிபதிகள் அதிருப்தி தெரிவித்தனர்.

நீதிமன்ற உத்தரவை 10 நாட்களில் அமல்படுத்தாவிட்டால் தலைமைச் செயலாளரை நேரில் ஆஜராக உத்தரவிட நேரிடும். கடைசி உத்தரவை அமல்படுத்தும் வரை நீதிமன்றத்தில் ஆஜராகும்படி உத்தரவிட நேரிடும் என எச்சரித்த நீதிபதிகள், சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்கள் உள்ளிட்ட அதிகாரிகளுக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், ஊதியம் பெற அனுமதிக்க முடியாது எனவும் அறிவுறுத்தி, அனைத்து வழக்குகளின் விசாரணையையும் 10 நாட்களுக்கு தள்ளிவைத்தனர்.

### புதுக்கோட்டை வைரம்ஸ் பள்ளியின் சார்பாக

## அப்துல்கலாமின் 7-வது நினைவு தினத்தையொட்டி இலவச நோட்டுப்புத்தகங்கள் வழங்குதல்



புதுக்கோட்டை, ஆக.2-

முன்னாள் பாரத குடியரசுத்தலைவர் மாணவர்களின் இலட்சிய நாயகன் மேதகு அப்துல்கலாமின் 7-வது நினைவு தின விழாவினையொட்டி புதுக்கோட்டை நகர்மன்றம் அருகிலுள்ள அரசு உயர் துவக்க பள்ளியில், அப்பள்ளியின் தலைமையாசிரியர் சிவசக்திவேல் முன்னிலையில் இலவச நோட்டுப்புத்தகங்களை வைரம்ஸ் பள்ளியின் தலைவர் தேனாள் சுப்ரமணியன், ஒருங்கிணைப்பாளர் அஸ்வினி நாச்சம்மை ஆகியோர் வழங்கினர்.

நோட்டுப்புத்தகங்களை மாணவர்கள் மகிழ்ச்சியுடன் பெற்றுக்கொண்டனர். இந்நிகழ்வில் பங்கேற்ற அனைவரும் அரசு உயர் துவக்கப் பள்ளியின் வகுப்பறை அலங்காரங்களையும், மாணவர்களின் ஒழுக்க நெறிமுறைகளையும் கண்டு மகிழ்ந்து பாராட்டினர். இந்நிகழ்வில் வைரம்ஸ் பள்ளியின் முதல்வர் சிராஜுதின், துணை முதல்வர் சுப்பிரமணியன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள மன வளர்ச்சிகுன்றிய மாற்றுத்திறனாளகள் பயன்பெறும் வகையில் குளோபல் சிறப்பு பள்ளியை மயிலாடுதுறை வருவாய் கோட்டாட்சியர் வ.யுரேகா நேற்று திறந்து வைத்தர். அருகில் 24வது குருமகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவான தேசிக பரமாச்சார்ய சுவாமிகள் நகர்மன்றத் தலைவர் என்.செல்வராஜ், மாவட்ட மாற்றுதிறனாளிகள் நல அலுவலர் ஏ.சீனிவாசன், குளோபல் தொண்டு நிறுவனத்தின் நிறுவனர் தலைவர் ஆ.குமுதம், நிர்வாக இயக்குனர் சு.யு.கோபால் மற்றும் பலர் உள்ளனர்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை நேற்று தலைமை செயலகத்தில், ஜாக்டோ ஜியோ ஒருங்கிணைப்பாளர்கள் அன்பரசு, தாஸ், தியாகராஜன் மற்றும் நிர்வாகிகள் சந்தித்தனர். உடல் பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி உள்ளார்.

# பாண்டிச்சேரியில் 5 பெண்களை ஏமாற்றி திருமணம் செய்தமோசடி மன்னன் மீது கர்ப்பிணி மனைவி பரபரப்பு புகார்

புதுச்சேரி, ஆக. 2:

புதுச்சேரியில் ஒருவருக்கு தெரியாமல் ஒருவராக 5 பெண்களை ஏமாற்றி திருமணம் செய்து மோசடியில் ஈடுபட்ட கல்யாண மன்னன் மீது காவல்நிலையத்தில் பாதிக்கப்பட்ட 4 மனைவி பெண் குழந்தையுடன் வந்து கண்ணீருடன் புகார் அளித்துள்ளார். புகாரில் சிக்கியுள்ள கல்யாண மன்னன் அரியாங்குப்பத்தை சேர்ந்த சீனு என்கிற தெய்வநாயகன். இவர் கடலூர் மாவட்டம் மேலுகுப்பம்பிள்ளையார் கோவில் பகுதியை சேர்ந்த காயத்ரியை முறைப்படி திருமணம் செய்து கொண்டார்.

கொரோனா ஊரடங்கு காலத்தில் இவரகள் திருமணம் நடைபெற்றதால் வரவேற்பு நிகழ்ச்சி வைக்கவில்லை. இந்நிலையில் காயத்ரிக்கு வரதட்சனையாக 6 பவுன் நகை மற்றும் இருசக்கர வாகனம், பீரோ, கட்டில் வழங்கப்பட்டது. 3 மாதம் குடும்பம் நடத்திய தெய்வநாயகன் மனைவியிடம் அதிக பணம் கேட்டு தொல்லை கொடுத்ததால் காயத்ரியை அவரது தாயார் அழைத்து சென்றுவிட்டார். அப்போது 3 மாத கர்ப்பினியாக இருந்த காயத்ரியை கணவன் தெய்வநாயகன் வந்து பார்க்கவில்லை.

இதனால் சந்தேகம் அடைந்த காயத்ரி கணவரை குறித்து விசாரித்த போதுதான் அவர் ஏற்கனவே 5 திருமணங்கள் செய்த கல்யாண மோசடி மன்னன் என்ற திடுக்கிடும் தகவல் தெரியவந்தது. முதல் மனைவி அனிதா, இரண்டாவது மனைவி தேவி, மூன்றாவது மனைவி கனகவள்ளி ஆகியோரை திருமணம் செய்து கொண்டது தெரியவந்திருக்கிறது. முதல் மனைவியான அனிதா என்கிற இந்திரகுமாரி என்பவருக்கும் தனக்கும் திருமணம் ஆகி பிரிவு ஏற்பட்டு விவாகரத்து பெறப்பட்டது என்று கூறி திருமணம் செய்துள்ளார்.

ஆனால் இருவருக்கும் விவாகரத்து ஆகவில்லை. தொடர்ந்து 5 பெண்களை ஏமாற்றி திருமணம் செய்தது குறித்து காயத்ரி கேட்ட போது அடியாட்களை வைத்து அடிக்கவும், கொலை செய்யவும் முயன்றதாக தெய்வநாயகன் மீது காயத்ரி குற்றம் சாட்டியுள்ளார். கயத்ரி பிரசவத்திற்காக புதுச்சேரி மருத்துவனையில் அனுமதிக்கபட்ட போது 5-வதாக தெய்வநாயகன் திருமணம் செய்துள்ளது தெரியவந்திருக்கிறது. தெய்வநாயகன் மீது புகார் அளிக்கபட்டதால் அவரை பிடித்து போலீசார் விசாரணை நடத்த உள்ளனர்.

# குடியிருப்பு பகுதியில் குப்பை கழிவுகளை அகற்றக்கோரி தெரு வாசிகள் திடீர் ஆர்ப்பாட்டம்



சீர்காழி, ஆக. 2:

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி தென்பாதியில் காட்டுநாயக்கன் தெருவில் குடியிருந்து வரும்பெரும்பாலானோர் சீர்காழி நகராட்சியில் துப்புரவு பணியில் வேலை பார்த்து வருகின்றனர்.

இந்த தெருவிற்கு செல்லும் மெயின் ரோட்டின் நுழைவாயில் அருகில் சீர்காழி நகராட்சி சார்பில் காட்டுநாயக்கன் தெரு என்ற பெயர் பலகை வைக்கப்பட்டிருந்தது .. இந்நிலையில் கடந்த சில தினங்களுக்கு முன்பு இரவோடு இரவாக இந்த பெயர் பலகை திடீரென அகற்றப்பட்டதால் தெருவாசிகள் அதிர்ச்சி அடைந்தனர். இதனால் ஆத்திரமடைந்த காட்டு நாயக்கன் தெருவை சேர்ந்த பொதுமக்கள் அகற்றப்பட்ட பெயர் பலகையை மீண்டும் வைக்க கோரி திடீர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் .

மேலும் , குடியிருப்பு அருகில் உள்ள குப்பை கிடங்கில் கழிவுகளை கொட்ட கூடாது . குப்பை கிடங்கை அகற்ற வேண்டும் ,பணி செய்யும் பணியாளர்களுக்கு பொது சுகாதார வளாகம் அமைத்து தர வேண்டும் . பொது கழிவறை வசதி ஏற்படுத்த வேண்டும், , உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதை தொடர்ந்து நகராட்சி ஆணையர் பொறுப்பு ராஜகோபாலன், மேலாளர் காதர்கான், துப்புரவு மேற்பார்வையாளர்கள் வீரப்பன், அலெக்ஸ் மற்றும் நகராட்சி அலுவலர்கள் பேச்சுவார்த்தை நடத்தினர், அதனை தொடர்ந்து அகற்றப்பட்ட தெருவின் பெயர் பலகை மீண்டும் அதே இடத்தில் வைக்கப்பட்டது. மற்ற கோரிக்கைகள் மீது அதிகாரிகளுடன் கலந்து ஆலோசித்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவித்ததை எடுத்து காட்டுநாயக்கன் தெருவாசிகள் கலைந்து சென்றனர் இதனால் அப்பகுதியில் பரபரப்பு நிலவியது.

அமிர்தம் ஸ்டோர்ஸ் A/C
♦ பாத்திரங்கள் ♦ பர்னிச்சர்ஸ் ♦ எலக்ட்ரானிக்ஸ்
♦ பிளாஸ்டிக்ஸ் ♦ பேக்ஸ்
கீழ 2ம் வீதி, புதுக்கோட்டை. போன் : 04322 290395
www.amirthamstores.co.in amirthammetals@gmail.com



தமிழ்நாடு கம்ம நாயுடு மகாஜன சங்கத்தின் மாநில தலைவரும் இளைஞர்களின் எழுச்சி நயாகருமான ரவீந்திரன் கெங்குசுவாமி நாயுடு அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு கம்ம இளைஞர் அணி மாநில தலைவர் பிரவீன் மற்றும். குமார் திருவள்ளூர் மாவட்ட தலைவர் அவர்களின் ஆலோசனைப்படி திருவள்ளூர் மேற்கு மாவட்ட இளைஞர் அணி சார்பாக சுமார் 200 பேருக்கு அன்னதானம் திருவள்ளூர் மாவட்ட இளைஞர் அணி செயலாளர் பாலசுப்பிரமணி அவர்களின் தலைமையில் நடத்தப்பட்டது.ஹரிபாபு திருவள்ளூர் சட்டமன்ற தொகுதி தலைவர் தில்லிப் குமார் திருவள்ளூர் சட்டமன்ற தொகுதி செயலாளர் முன்னிலை. . சரத் குமார் நாயுடு திருவள்ளூர் நகர தலைவர் மற்றும் நவீன் குமார் திருவள்ளூர் நகர செயலாளர் ஏற்பாட்டில் நடைபெற்றதுதிருவள்ளூர் மாவட்ட துணை தலைவர்களும் துணை செயலாளர் களும் மற்றும் திருவள்ளூர் மேற்கு மாவட்ட துணை தலைவர்கள் மற்றும் துணை செயலாளர் களும் திருவள்ளூர் நகர துணை தலைவர்களும் துணை செயலாளர் களும் திருத்தனி தொகுதி தலைவர்களும் செயலாளர் களும் திருத்தனி நகர தலைவர்கள் செயலாளர்களும் திருவள்ளூர் இளைஞர்களும் கலந்து கொண்டு இவ்விழாவை சிறப்பித்தனர்




மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைத்தீர்க்கும் நாள் கூட்டத்தில் மயிலாடுதுறை மாவட்ட வருவாய் அலுவலர் சோ.முருகதாஸ், நேற்று பொது மக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களைப் பெற்றபோது எடுத்தப்படம். அருகில் உதவி ஆணையர் (கலால்) கோ.அர. நரேந்திரன் உடன் உள்ளார்.

# சீர்காழி அருகே பூட்டிய வீட்டில் திருட முயன்ற நபர் கைது

சீர்காழி, ஆக. 2 -

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அருகே சூரக்காடு மெயின் ரோட்டை சேர்ந்தவர் முருகேசன் மகன் பாபு (வயது 57) இவர் எல்லை பாதுகாப்பு படை இன்ஸ்பெக்டராகதிரிபுரா மாநிலத்தில் பணிபுரிந்து வருகிறார்.



இந்நிலையில் இவர் வீட்டை பூட்டி விட்டு வெளியே சென்று விட்டு மீண்டும் நேற்று மதியம் வீட்டிற்கு வந்தபோது வீட்டின் முன்புற கதவு உடைக்கப்பட்டதைக் கண்டு அதிர்ச்சி அடைந்தார். மேலும் அக்கம் பக்கத்தினர் உதவியோடு வீட்டிற்குள் சென்று பார்த்த பொழுது வீட்டிற்குள் ஒருவர் திருடுவதற்காக பதுங்கி நிற்பதை கண்டு அதிர்ச்சி அடைந்த பாபு மற்றும் அக்கம் பக்கத்தினர் உதவியோடு அந்த மர்ம நபரை பிடித்து சீர்காழி காவல்துறையிடம் ஒப்படைத்தனர்.

இது குறித்து சீர்காழி போலீசார் வழக்கு பதிவு செய்து அந்த நபரை கைது செய்து விசாரணை செய்ததில் தஞ்சை மாவட்டம் பாபநாசம் ஆதனூர் கல்வி குடி மெயின் ரோட்டை சேர்ந்த சேட்டான் மகன் ஜெகபர் சாதிக் (வயது 37) என்பது தெரிய வந்தது. இவரிடம் போலீசார் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்

# மணமேல்குடி அருகே பெருமருதூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற முன்னாள் மாணவர்கள் சந்திப்பு விழா



புதுக்கோட்டை,ஆக.2-

புதுக்கோட்டை மாவட்டம் மணமேல்குடி அருகே பெருமருதூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் முன்னாள் மாணவர்கள் சந்திப்பு விழா நடைபெற்றது.

அறந்தாங்கி அருகே மணமேல்குடி ஒன்றியத்துக்குட்பட்ட பெருமருதூர் ஊராட்சியில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் சுமார் 250 மாணவ மாணவிகள் பயின்று வருகின்றனர். இப்பள்ளிக்கு தேவையான சுமார் 1-லட்சம் மதிப்பீட்டில் மின்விசிறி, டியூப் லைட், சின்டெக்ஸ் டேங்க் ,குடி நீர் மோட்டர் ஆகிய பொருட்களை முன்னாள் மாணவர்களான 97-98 ஆம் ஆண்டு பத்தாம் வகுப்பு பயின்றவர்கள் பொருட்களை வழங்கி நம் பள்ளி நம் தொண்டு என்ற அடிப்படையில் பள்ளியில் சந்திப்பு விழா நடைபெற்றது.

நிகழ்ச்சியில் பள்ளி தலைமை ஆசிரியர் லோகம்பாள், ஊராட்சி மன்ற தலைவர் மாணிக்கவள்ளி ,முத்துக்குமார், பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் ராமசாமி, முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் உமாபதி பிள்ளை, சிறப்பு விருந்தினராக அசோக் குமார் அரசு உயர்நிலைப்பள்ளி வன்னிமேலப்பட்டி மதுரை மாவட்டம் ஆகியோர் கலந்து கொண்டனர் நிகழ்ச்சியில் முன்னாள் மாணவர்கள் 25 பேரும் மற்றும் மாணவர்களும் ஆசிரியர்களும் கலந்துகொண்டனர்.

# அருணாசலேஸ்வரர் கோவிலில் பக்தர்கள் கூட்டம் அலைமோதியது



தி.மலை , ஆக. 2:

திருவண்ணாமலை அருணாச்சலேஸ்வரர் கோவில் நினைத்தாலே முக்தி தரும் ஸ்தலமாக விளங்குகிறது. வழக்கமாக பக்தர்கள் ஞாயிற்றுக்கிழமை மற்றும் விடுமுறை நாட்களில் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த ஏராளமான பக்தர்கள் வந்து சாமி தரிசனம் செய்வார்கள்.

நேற்று திடீரென அருணாச்சலேஸ்வரர் கோவிலில் பக்தர்கள் கூட்டம் அலைமோதியது. அதிகாலையில் இருந்து உள்ளூர் மட்டுமின்றி வெளி மாவட்டங்கள், வெளி மாநிலங்களில் இருந்து ஏராளமான பக்தர்கள் நீண்ட வரிசையில் நின்று அதிக மணி நேரம் காத்திருந்து சாமி தரிசனம் செய்தனர்.

## நரிக்குறவர் சமூகத்தை சேர்ந்த

# ஆறு மாணவர்கள் தேசிய அளவில் நடைபெற்ற யோகா போட்டியில் பரிசுகளை குவித்து சாதனை



மயிலாடுதுறை, ஆக. 2:

மயிலாடுதுறை மாவட்டம் பல்லவராயன் பேட்டையில் நரிக்குறவர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கான நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் உண்டு உரைவிட பள்ளி செயல்பட்டு வருகின்றது.

இந்த பள்ளியில் பயிலும் நரிக்குறவர் சமூகத்தை சேர்ந்த 16 மாணவர்கள் கடந்த மாதம் 29ஆம் தேதி இந்திய அரசு , இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு அமைச்சகம் , நேரு யுவகேந்திரா சார்பில் கும்பகோணத்தில் நடைபெற்ற தேசிய அளவிலான யோகா போட்டியில் கலந்து கொண்டனர். நான்கு வயது முதல் 17 வயது வரையிலான பல்வேறு பிரிவுகளாக நடைபெற்ற இந்த போட்டியில் சீராசனம், மயூராசனம், பாகாசனம், காலபைரவாசனம் உள்ளிட்ட பல்வேறு யோகாசனங்களை போட்டியாளர்கள் செய்து காண்பித்தனர்.

பல்வேறு மாவட்டங்கள் மற்றும் மாநிலங்களில் இருந்து ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பங்கு பெற்ற இப்போட்டியில் நரிக்குறவர் சமூகத்தை சேர்ந்த இரண்டு சிறுமிகள் உட்பட ஆறு மாணவர்கள் முதல் மற்றும் மூன்றாம் பரிசுகளை வென்று குவித்துள்ளனர். 11 வயதில் இருந்து 13 வயது பிரிவில் நடைபெற்ற போட்டியில் நவீன் ராஜ் என்ற சிறுவன் முதல் பரிசையும் 14 முதல் 17 வரை நடைபெற்ற போட்டியில் சாமுவேல் இரண்டாம் பரிசையும் சஞ்சனா ,மகாலட்சுமி, ஈஸ்வரன், சக்தி, உள்ளிட்டோர் மூன்றாம் பரிசையும் பெற்றனர்.

தொடர்ந்து வெற்றி பெற்ற மாணவர்களுக்கு அவரது பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் உடற்கல்வி ஆசிரியர் ஆசைத்தம்பி ஆகியோர் பாராட்டுகளை தெரிவித்தனர். மேலும் மாணவர்களை ஊக்கப்படுத்துவதன் மூலம் தங்கள் சமூகத்தை சேர்ந்த அனைவரும் தேசிய அளவில் பல்வேறு போட்டிகளில் பங்கேற்று நாட்டிற்கு பெருமை சேர்ப்போம் என வெற்றி பெற்ற மாணவர்களின் பெற்றோர்கள் தெரிவித்துள்ளனர்.

## ஆவின் பால் பாக்கெட் அளவு குறைவாக இருப்பதால்

# வாடிக்கையாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் கடும் அதிர்ச்சி



சென்னை , ஆக. 2:

தி.மு.க., அரசு பொறுப்பேற்றதும், தேர்தலின் போது அளித்த வாக்குறுதிப்படி, பால் விலை லிட்டருக்கு 3 ரூபாய் குறைக்கப்பட்டது. இதனால், ஆவின் பால் விற்பனை அதிகரித்துள்ளது. நகரங்களில் மட்டுமின்றி, கிராமப்புற மக்களும், ஆவின் பாலை, கடைகளில் கேட்டு வாங்க துவங்கி உள்ளனர்.

இந்நிலையில், ஆவின் பால் பாக்கெட் அளவு குறைவாக இருப்பதாக புகார் எழுந்துள்ளது. சென்னையில் நேற்று முன்தினம் விற்பனைக்கு வந்த 500 மி.லி., பால் பாக்கெட்டில், அளவு குறைவாக இருந்தது. ஆவின்பால்பாக்கெட்டை பொறுத்தவரை, அதன் அளவை, கிராமில் கணக்கிடும்போது, 500 மி.லி., என்பது, 517 கிராம் இருக்கவேண்டும். இதில், பால் பாக்கெட் 2 கிராம் இருக்கும். எவ்வகையிலும் பாலின் எடை, 515 கிராமுக்கு குறையாமல் இருக்க வேண்டும்.

ஆனால், இரு நாட்களாக விற்பனைக்கு வந்த பால் பாக்கெட்டுகள் 430 கிராம் மட்டுமே இருந்தன. இதுகுறித்து வீடியோ வெளியிட்டுள்ள தமிழ்நாடு பால் முகவர்கள் சங்க தலைவர் பொன்னுசாமி, ஆவினில் தண்ணீர் கலந்து மிகப்பெரிய அளவில் மோசடி நடைபெற்றது போல் ஆவின் பால் பாக்கெட்டில் அளவை குறைத்து 515கிராம் இருக்க வேண்டிய பால் பாக்கெட்டில் 430கிராம் மட்டுமே அடைத்து மிகப்பெரிய அளவில் முறைகேடு நடைபெற்றுள்ளதுவெளிச்சத்திற்கு வந்துள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

அது குறித்து நீதி விசாரணை நடத்த வேண்டும் தமிழக அரசுக்கு பால் முகவர்கள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# ஆவுடையார்கோவில் மாவடிகோட்டை கிராமத்தில் புரவி எடுப்பு விழா




ஆவுடையார் கோவில், ஆக.2-

புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார் கோவில் அருகே உள்ள மாவடிகோட்டை கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீ பூரண புஷ்பாகலாம்பிகை சமேத ஸ்ரீ கள்ளழகர் அய்யனார், ஸ்ரீ காமாட்சி அம்மன் கோவில் பொங்கல் திருவிழாவை முன்னிட்டு புரவி எடுப்பு விழா நடைபெற்றது.

ஆவுடையார் கோவில் தாலுகாவிற்குட்பட்ட மாவடிகோட்டை கிராமத்தில் புரவி எடுப்பு விழா நடைபெற்றது. கடந்த 24ஆம் தேதி காப்பு கட்டுதளுடன் திருவிழா தொடங்கி திருவிழாவின் முக்கிய நிகழ்வான ஒன்பதாம் நாள் புரவி எடுப்பு விழா கோலாகலமாக நடைபெற்றது.

விழிமங்கலம் கிராமத்தில் இருந்து மண்ணால் செய்யப்பட்ட குதிரை காளைகள், மதலைகள் போன்றவைகளை மேளதாள வாத்தியங்களுடன் வாணவேடிக்கையுடன் பொதுமக்கள் இரண்டு கிலோமீட்டர் தூரம் தோளில் சுமந்தபடி விவசாயம் செழிக்க வேண்டியும், நல்ல மழை பெய்ய வேண்டியும், குழந்தைவரம்வேண்டியும் திருமணம் நடைபெற வேண்டியும் நோய் நொடி இல்லாமல் வாழ வேண்டியும் பக்தர்கள் நேர்த்திக்கடனாக சுவாமிக்கு புரவி எடுத்து சிறப்பு வழிபாடு செய்தனர்.

# கந்தர்வகோட்டை ஸ்ரீ முத்துமாரி அம்மனுக்கு ஆடிப்பூரத்தையொட்டி வளையல் அலங்காரம்



கந்தர்வகோட்டை, ஆக.2-

கந்தர்வகோட்டை நகரில் குடிகொண்டிருக்கும் ஸ்ரீ முத்துமாரி அம்மனுக்கு ஆடிப்பூரத்தையொட்டி சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டிருந்தது. ஆடிப்பூரத்தன்று காலை முதல் ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில் திருவிழா போல் பக்தர்கள் அலைகடலென குவிந்தனர் .மேலும் சமயபுரம் மாரியம்மன் கோவிலுக்கு செல்லும் பக்தர்கள் மாரியம்மன் கோவிலுக்கு வந்து சாமி தரிசனம் செய்து அம்மன் அருள் பெற்று சென்றார்கள்.

முன்னதாக காலை வேளையில் பக்தர்களுக்கு முன்பாக அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம் செய்யப்பட்டது, அதில் எண்ணெய் காப்பு செய்து திரவியதூள், மஞ்சள் தூள், அரிசி மாவு, தேன் ,பால் ,தயிர் ,இளநீர், சர்க்கரை, சந்தனம், பன்னீர், குங்குமம் போன்ற பொருட்களால் அபிஷேகம் செய்யபட்டு அம்மன் மனம் குளிர செய்யப்பட்டது.

இதில் ஏராளமான பக்தர்கள் அம்மன் அருள் பெற்றார்கள், பிறகு அந்தி சாய்ந்த வேளையில் இப்பகுதியில் கண்கண்ட தெய்வமான ஸ்ரீமுத்துமாரியம்மனுக்கு லட்ச வளையல்களால் அலங்காரம் செய்து வழிபட்டனர், இந்த அலங்காரத்தை காணும் பெண்களுக்கு திருமண வரமும் , திருமணம் ஆனா பெண்களுக்கு குழந்தை வரமும், அனைவருக்கும் செல்வமும், செல்வாக்கும் கிடைக்கும் என்பது ஐதீகம், வளையல் அலங்காரத்திலிருந்த அம்மனை திரளான பக்தர்கள் தரிசனம் செய்து சென்றனர்.









▶ புதுக்கோட்டை மாவட்டம் திருவரங்குளத்தில் ஐஓபி வங்கியில் உள்ள ஏடிஎம் மெஷின் கடந்த நான்கு நாட்களாக செயல்படவில்லை இந்த பகுதியில் உள்ள வாடிக்கையாளர்கள் நூற்றுக்கணக்கானவர்கள் தினமும் வங்கி வாசலில் இன்று திறப்பார்களா என்று பார்த்து பார்த்து விட்டு செல்கின்றனர். ஆனால் எப்போது திறப்பார்கள் என்று தெரியவில்லை. வங்கியில் கேட்டால் காரைக்குடி தலைமை அலுவலகத்திற்கு தகவல் தெரிவித்துள்ளதாக கூறுகின்றனர் ,விரைவில் ஏடி எம் மெஷினை சரி செய்ய நடவடிக்கை எடுப்பார்களா என்பது பொதுமக்களின் கோரிக்கையாக உள்ளது

# கள்ளக்குறிச்சி கலவரம் தொடர்பாக கைதான 108 பேருக்கும் ஆகஸ்ட்12 வரை காவல் நீட்டிப்பு

கள்ளக்குறிச்சி , ஆக.2-

கனியாமூர் கலவரம் தொடர்பாக முதல்கட்டமாக கைது செய்யப்பட்டுள்ள 108 பேருக்கு ஆகஸ்ட் 12ம் தேதி வரை நீதிமன்ற காவல் நீட்டித்து நீதிமன்றம் உத்தரவிட்டது.

கள்ளக்குறிச்சி மாவட்டம் சின்னசேலம் அடுத்த கனியாமூர் சக்தி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் பிளஸ் 2 மாணவி ஸ்ரீமதி இறந்ததை தொடர்ந்து கடந்த 17ம் தேதி பள்ளிக்கு எதிரில் போராட்டம் நடந்தது. அப்போது கலவரக்காரர்கள் பாதுகாப்பு பணியில் இருந்த போலீசாரை கற்களால் தாக்கி அத்துமீறி பள்ளிக்குள் நுழைந்து அங்கிருந்த பஸ், கார், டிராக்டர், பைக் உள்ளிட்ட பல வாகனங்களுக்கும் சான்றிதழ்களுக்கும் தீ வைத்தனர்.வகுப்பறையில் இருந்த தளவாட பொருட்களை அடித்து நொறுக்கி சூறையாடினர். நான்கு மணி நேரத்திற்கு மேலாக நடந்த கலவரம் தமிழகத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

கலவரம் தொடர்பாக முதல்கட்டமாக 108 பேரை போலீசார் கைது செய்து கடந்த 18ம் தேதி கள்ளக்குறிச்சி குற்றவியல் நடுவர் நீதித்துறை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர். அனைவரையும் 15 நாட்கள் நீதிமன்ற காவலில் வைக்க குற்றவியல் நீதித்துறை நடுவர் முகமது அலி உத்தரவிட்டார்.

திருச்சி மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ள 108 பேரின் நீதிமன்ற காவல் நேற்றுடன் நிறைவடைய இருந்த நிலையில், 108 பேரும் வீடியோ கான்பரன்ஸ் மூலம் கள்ளக்குறிச்சி 2 வது குற்றவியல் நடுவர் நீதிமன்ற நீதிபதி முகமது அலி முன்பு ஆஜர்படுத்தப்பட்டனர். அப்போது 108 பேருக்கும் ஆகஸ்ட் 12ம் தேதி வரை நீதிமன்ற காவல் நீட்டிக்கப்படுவதாக நீதிபதி உத்தரவிட்டார்.

# புதுக்கோட்டையில் 28 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி இடதுசாரி விவசாயத் தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்



புதுக்கோட்டை, ஆக.2-

ஒன்றிய பா.ஜ.க மோடி அரசு விவசாயத் தொழிலாளர்களுக்கு ஒருங்கிணைந்த மத்திய சட்டத்தை நிறைவேற்றிடவும், ஏழை, எளிய மக்களின் 28 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தியும் இடதுசாரி விவசாயத் தொழிலாளர் சங்கங்களின் சார்பில் புதுக்கோட்டையில் நேற்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு இடதுசாரி விவசாயத் தொழிலாளர் சங்கங்களின் மாவட்டத் தலைவர்கள் எம்.சண்முகம், ஆர்.முருகானந்தம், கா.சோதிவேல் ஆகியோர் தலைமை வகித்தனர். ஆர்ப்பாட்டத்தை தொடங்கி வைத்து ஏனாதி ஏ.எல். ராசு பேசினார். வீ.மூ. வளத்தான் கோரிக்கை விளக்கவுரையாற்றினார்.

கோரிக்கைகளை ஆதரித்து சிஐடியு மாவட்டச் செயலாளர் ஏ.ஸ்ரீதர், விவசாயிகள் சங்க மாவட்டச் செயலாளர் எஸ். சி.சோமையா, விதொச மாவட்டப் பொருளாளர் கே.சண்முகம், மாநிலக்குழு உறுப்பினர் க.சுந்தர்ராஜன் உள்ளிட்டோர் பேசினர். போராட்டத்தை நிறைவு செய்து சங்கத்தின் மாநிலக்குழு உறுப்பினர் எஸ். சந்திரன் உரையாற்றினார். ஆர்ப்பாட்டத்தில் ஏராளமான விவசாயத் தொழிலாளர்கள் பங்கேற்றனர்



▶ அதிமுக ஒருங்கிணைப்பாளரும் முன்னாள் தமிழக முதல்வருமான ஓ பன்னீர்செல்வம் ஆணைக்கிணங்க மதுரை தெற்கு மாவட்ட செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ராமமூர்த்தி தங்களது ஆதரவாளர்களுடன் மற்றும் கட்சி தொண்டர்களுடன் திருமங்கலம் பகுதியில் அமைந்துள்ள தேவர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் திருமங்கலம் ஒன்றியம் ராஜ்மோகன்,கொடி வைரன்,மாவட்டஇளைஞர் அணி ரங்கராஜ் மற்றும் கள்ளிக்குடி ஒன்றியம் வழக்கறிஞர் பெரியசாமி ,மற்றும் தெய்வேந்திரன், கருப்பையா, மேலும் கின்னி மங்கலம் செல்வம், சிவபிரியா,பாண்டி,பரணி முருகன், மற்றும் ராஜாமணி ,ஸ்ரீராம்,மற்றும் அதிமுக நிர்வாகிகள் ,கிளைச் செயலாளர்கள், ஊராட்சி செயலாளர்கள், ஒன்றிய தலைவர்கள், மற்றும் மாவட்ட மகளிர் அணி ஆகியோர் மற்றும் கட்சி தொண்டர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டு தேவர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

### புதுக்கோட்டையில் இந்திய மருத்துவ சங்கம் சார்பில்

# மூத்த மருத்துவர்களுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருதுவழங்கும் விழா



புதுக்கோட்டை, ஆக.2-

புதுக்கோட்டையில் இந்திய மருத்துவ சங்கம் சார்பில் மூத்த மருத்துவர்களுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருதுவழங்கும் விழா நடைபெற்றது.

புதுக்கோட்டையில் இந்திய மருத்துவ சங்கம் சார்பில் மருத்துவர் தின கொண்டாட்டம் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி பிறந்தநாள் மற்றும் மூத்த மருத்துவர்களுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருதுவழங்கும் விழா இளா ரிசாட்டில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. புதுக்கோட்டை கிளைத் தலைவர் டாக்டர் சுவாமிநாதன் தலைமைதாங்கினர், கிளைச்செயலாளர்முகமது சுல்தான்அனைவரையும் வரவேற்றார் ,விழாவில் முதன்மை விருந்தினராக இந்திய மருத்துவ சங்கம் தமிழ்நாடு கிளைத் தலைவர் டாக்டர் பழனிச்சாமி, சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு இந்திய மருத்துவ சங்கத்தின் மூத்த மருத்துவர்கள் ,சுப்புராமன், சீனியப்பன், சுப்பிரமணியன், இராஜாராம், ரவிக்குமார், ராமமூர்த்தி, இராமநாதன், கருப்பையா, எழிலரசன், ஜெயலட்சுமி, சாரதாமணி ஆகியோர்க்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி மருத்துவர்களின் செயல்பாடுகள் பற்றிப்பேசினார் .

சட்டமன்றஉறுப்பினர் வை .முத்துராஜா கலந்துகொண்டு புதிதாக சங்கத்தில் இணைந்துள்ள மருத்துவர்கள் ஹரிராம், அரவிந்த், விக்னேஷ்,பிரினா,வீனஸ் ஆகியோரைகௌரவித்தும் சிறுவர்களின் பரதநாட்டியம் ,நடனம் இசை நிகழ்ச்சிகளை தொடங்கி வைத்து நற்சான்றும்வழங்கினார். கிழக்கு மண்டல துணை தலைவர் டாக்டர் சிங்காரவேலு , மருத்துவர்கள் சலீம் , ராமமூர்த்தி,வெண்ணிலா , நவரத்தினசாமி புதுக்கோட்டை கம்பன் கழக கூடுதல் செயலாளர் பாரதி உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள்

மாமல்லன் ஐஏஎஸ் அகாடமி செந்தில் விழாவை தொகுத்துவழங்கினார் நிறைவாகநிதிசெயலாளர் கோபாலகிருஷ்ணன் நன்றி கூறினார்.

# பிற்போக்குத் தனத்தை வளர்க்கும் புத்தகம் நமக்குத் தேவையில்லை – திரைக்கலைஞர் ரோகிணி பேச்சு




புதுக்கோட்டை, ஆக.2-

மூடநம்பிக்கையை, பிற்போக்குத் தனத்தை வளர்க்கும் புத்தகங்கள் நமக்குத் தேவையில்லை என்றார் தமுஎகச மாநில துணைத் தலைவரும், திரைக்கலைஞருமான ரோகிணி.

புதுக்கோட்டை மாவட்ட நிர்வாகமும், தமிழ்நாடு அறிவியல் இயக்கமும் இணைந்து நடத்தி வரும் 5ஆவது புத்தகத் திருவிழாவின் 3 ஆம் நாள் மாலை நடைபெற்ற சொற்பொழிவில் அவர் பேசியதாவது,

மூடநம்பிக்கைகளை வளர்க்கும், பிற்போக்குத் தனத்தை வளர்க்கும் எதுவும் நமக்குத் தேவையில்லை. எல்லா நேரமும் நல்ல நேரம்தான். நம்முடைய மனது நிம்மதியாக, நல்ல எண்ணங்களோடு இருந்தால் அந்த நேரம் எல்லாம் நல்ல நேரம்தான். மற்றவர்களைப் பற்றி நாம் தவறாக நினைத்தால் அந்த நேரம்தான் கெட்ட நேரம்.பெண் குழந்தைகள் படிப்பது என்பது ஒரு காலத்தில் சவாலான காலம். இப்போது ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும் படிக்க வைக்கிறோம். தடைகளை உடைத்ததால் பெண் கல்வி வாய்த்திருக்கிறது. அதேபோலத்தான் பெண்ணடிமைத் தனத்தையும் உடைக்க வேண்டும் என்றார்.

முன்னதாக தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கம் சார்பில் புத்தகத் திருவிழாவையொட்டிய விழிப்புணர்வு புத்தகப் பேரணி நடைபெற்றது.

புதுக்கோட்டை அண்ணா சிலையில் இருந்து நகரின் முக்கிய வீதிகள் வழியாக புத்தகத் திருவிழா நடைபெறும் நகர்மன்ற வளாகம் வரை நடைபெற்ற பேரணிக்கு, சங்கத்தின் துணைத் தலைவரும், திரைக்கலைஞருமான ரோகிணி தலைமை வகித்தார்.

கவிஞர் தங்கம்மூர்த்தி, மாநிலச் செயற்குழு உறுப்பினர் பிரகதீஸ்வரன், மாநிலத் துணைச் செயலர் நீலா, மாவட்டத் தலைவர் ராசி பன்னீர்செல்வன், மாவட்டச் செயலர் ஸ்டாலின் சரவணன், மாநிலக்குழு உறுப்பினர்கள் சு.மதியழகன், இரா.தனிக்கொடி, மாவட்டப் பொருளாளர் ஜெயபாலன் உள்ளிட்டோரும் பங்கேற்றனர். ஊர்வலத்தில்; பாண்டியன் சிலம்புப் பாசறையின் சார்பில் சிலம்ப நிகழ்ச்சி நடைபெற்றது.

# திருக்கோகர்ணம் தேர் விபத்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் நபர்களையும் சந்தித்தார் அமைச்சர் சேகர்பாபு



புதுக்கோட்டை , ஆக.2-


புதுக்கோட்டை திருக்கோகர்ணம் பிரகதாம்பாள் திருக்கோயில் தேர் விபத்து நடைபெற்ற இடத்தினை பார்வையிட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் நபர்களையும் சந்தித்து முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.50,000 க்கான காசோலைகளை அமைச்சர் பி.கே. சேகர்பாபு வழங்கினார்.

புதுக்கோட்டை தொண்டைமான் மன்னர்களின் குலதெய்வ கோவிலாகவும் புதுக்கோட்டை மாவட்ட திருக்கோயில்களுக்கு தலைமை கோயிலாக விளங்குவது இந்த பிரகதாம்பாள் கோயில் தான்.ஞாயிற்றுக்கிழமை ஆடிப்பூர விழாவையொட்டி நடைபெற்ற தேர்திருவிழாவில் எதிர்பாராதவிதமாக விபத்து நடைபெற்றது. விபத்தில் காயமடைந்த 8 நபர்கள், புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்நிலையில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிற்கிணங்க தேர் விபத்து நடந்த இடத்தினை பார்வையிட்டு ஆய்வு செய்ததுடன். காயமுற்று சிகிச்சை பெறுபவர்களையும் நேரில் பார்வையிட்டு, ஆறுதல் கூறி, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.50,000 க்கான காசோலைகளையும் அமைச்சர் பி.கே. சேகர்பாபு வழங்கினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கூறுகையில்: தமிழ்நாடு முதலமைச்சர் புதுக்கோட்டை மாவட்டம், திருக்கோகர்ணம் பிரகதாம்பாள் திருக்கோயில் தேர் கவிழ்ந்து ஏற்பட்ட விபத்தில் 8 பேர் காயமடைந்த செய்தியினை கேட்டு வருத்தமுற்றார். இவ்விபத்து குறித்து விசாரித்து உரிய மேல் நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், காயமடைந்த 8 பேருக்கு தலா ரூ.50,000 முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிட உத்தரவிட்டதைத் தொடர்ந்து, சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு அரசு நிவாரண உதவிகள் வழங்கி, அவர்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சைகள் குறித்து மருத்துவர்களிடம் கேட்டறியப்பட்டு, உரிய சிகிச்சைகள் வழங்க அறிவுறுத்தப்பட்டது. மேலும் வருங்காலங்களில் இதுபோன்ற விபத்துகள் ஏற்படாதவண்ணம் தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கலெக்டர் கவிதா ராமு, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் வந்திதா பாண்டே, புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் முத்துராஜா, முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே. செல்லப்பாண்டியன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கவிதைப்பித்தன், முன்னாள் மாவட்ட ஊராட்சி துணைத் தலைவர் த.சந்திரசேகரன், மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் த.ஜெயலட்சுமி, புதுக்கோட்டை நகர்மன்றத் தலைவர் திலகவதி செந்தில், இணை ஆணையர்கள் ஜெயராமன், சூரியநாராயணன், உதவி ஆணையர் அனிதா, அரசு மருத்துவக்கல்லூரி முதல்வர் பூவதி, புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் (பொ) கருணாகரன், புதுக்கோட்டை திருக்கோயில்கள் செயல் அலுவலர் ராமமூர்த்தி மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# அண்ணாதுரைக்கு பொடி டப்பா, எம்ஜிஆர்.,க்கு தொப்பி, ஜெ.,வுக்கு 'மேக்அப்' பெட்டி சிலை வைப்பீர்களா?: சீமான் கேள்வி



சென்னை, ஆக.2-

கருணாநிதி நினைவாக சென்னை கடற்கரையில் பேனா சிலை வைப்பதாக திமுக அரசு கூறியுள்ளதை விமர்சித்த நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான், 'அண்ணாதுரைக்கு மூக்குப்பொடி டப்பா சிலையும், எம்ஜிஆர்.,க்கு தொப்பி சிலையும், ஜெயலலிதாவுக்கு மேக்அப் பெட்டி சிலையும் கடலுக்குள் வைப்பீர்களா' என கேள்வி எழுப்பியுள்ளார்.

கொசஸ்தலை ஆறும், பக்கிங்காம் கால்வாயும் எண்ணூர் முகத்துவாரத்தில் ஆற்றின் குறுக்கே உயர்மின் அழுத்த கோபுரங்கள் அமைப்பதற்காக சாலைகள் அமைக்கப்பட்டு கான்கிரீட்டுகள் போடப்பட்டு வருகின்றன. இதனை ஜூலை 31க்குள் அகற்றாவிட்டால் ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் எச்சரிக்கை விடுத்தார். இதனையடுத்து எண்ணூர் பஜாரில் சீமான் தலைமையில் அக்கட்சியினர் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். பின்னர் செய்தியாளர்களிடம் சீமான் கூறியதாவது:

இந்தியா 110 லட்சம் கோடி கடன் வைத்துள்ளது. தமிழகத்திற்கு 7 லட்சம் கோடி கடன் வந்துள்ளது. இந்த கடன் சதவீத உயர்வுதான் ஆட்சியாளர்கள் காட்டுகின்ற, கட்டமைக்க நினைக்கின்ற வளர்ச்சி. தமிழகத்தில் 10 ஆயிரம் அரசுப் பள்ளிக்கூடம் இடியும் நிலையில், சீரமைக்க முடியாத நிலையில் உள்ளது. அந்தந்த பகுதிகளில் உள்ள தொழிலதிபர்களிடம் பணம் வாங்கி சீரமைக்க வேண்டும் என்று தலைமை ஆசிரியர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. அடுத்து அவர்களிடமே ஊதியம் பெற்றுக் கொள்ளும்படி கூறுவீர்களா?

இவ்வளவு சிக்கல் இருக்கும்போது கருணாநிதி நினைவாக 80 கோடி ரூபாய்க்கு கடலுக்குள் பேனா வைக்கிறேன் என்று கூறுவது சரியா? அப்படியெனில் அண்ணாதுரை அடிக்கடி மூக்குப்பொடி போடுவார். அதனால் கடலுக்குள் பொடி டப்பா சிலையும், எம்ஜிஆர்.,க்கு நினைவாக தொப்பி சிலையும், ஜெயலலிதா திரைப்பட துறையில் மேக்அப் பெட்டியை அதிகம் பயன்படுத்தியதால் அவரது நினைவாக மேக்அப் பெட்டி சிலையும் கடலுக்குள் வைப்பீர்களா? உங்களுக்கெல்லாம் (கருணாநிதிக்கு) சமாதி வைத்ததே அதிகம். தேவை இல்லாத ஆட்டமெல்லாம் காட்டக்கூடாது. மக்கள் காசை வீணடிக்கக்கூடாது, ஆட்சி நடத்துங்கள். இவ்வாறு அவர் கூறினார்.

Owned & Published by **S.Sivasakthivel**, Published From : Plot No. 1103, Periyar Nagar, Rajagopalapuram Post, Pudukkottai, and Printed By: **K.selvaraj** Printed at: Jayam Offset Printers, 5623, South 4th Street, Pudukkottai. Editor: **S.Sivasakthivel**. Phone:04322-261577.
**Chennai Office: Chief Reporter S.Kadar Hussain,** ISR MEDIA ONE, Old no:112, New no:235, 4th floor, Angappa Naicken Street, Parrys, Chennai-600 001. (Near GT Court Way). PH-9840728971. E-Mail:pudugaivaralaru@gmail.com, pudugaivaralaru2@gmail.com, pontimesrep@gmail.com



# நீர்நிலை ஆக்கிரமிப்புகளை அகற்றும் உத்தரவை 10 நாட்களில் அமல்படுத்த வேண்டும்

# மழையை கூட சமாளிக்க முடியாத திமுக அரசு





# கள்ளக்குறிச்சி கலவரம் 108 பேரின் காவல் 12ஆம் தேதி வரை நீட்டிப்பு


சென்னை / புதுக்கோட்டை | 02.08.2022 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10

புதுகை

வரலாறு

நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

**ஆபிரகாம் பண்டிதர்** , தமிழகத் தமிழிசைக் கலைஞர் (பி.1859) (இ.1919)



**பிங்கலி வெங்கையா** , இந்திய தேசியக் கொடியை வடிவமைத்தவர் (பி.1876) (இ.1963)



**வித்தியா சரண் சுக்லா** , இந்திய அரசியல்வாதி, முன்னாள் அமைச்சர் (பி.1929) (இ.2013)



**பங்கர் ராய்** , இந்தியக் கல்வியாளர், செயற்பாட்டாளர் (பி.1945)




## இன்றைய நினைவு நாள்

**அஸிம்-உத்-தவுலா** , கர்நாடகத்தின் நவாப் (பி.1775) (இ.1819)



**அலெக்சாண்டர் கிரகாம் பெல்** , தொலைபேசியைக் கண்டுபிடித்தர் (பி.1847) (இ.1922)



**நாஞ்சில் கி. மனோகரன்** , தமிழக அரசியல்வாதி (பி.1929) (இ.2000)

